EELAM SOLIDARITY CAMPAIGN

# மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்!

துயரம் படர்ந்து கிடக்கும் எமது தேசத்தில், இன்னுமொரு முறை, சுயநலவான்களை தாக்கியழித்து, ஒடுக்குமுறைகள் அனைத்தையும் தகர்த்து, விடுதலைச் சூரியனின் ஒளியினில் எமது தேசத்தைக் காணப் புறப்பட்ட ஆயிரமாயிரம் இளைஞர்களின் ரத்தத்தால் எமது போராட்ட வரலாறு எழுதப்படுகிறது. அவ்வப்போது, விடுதலை இயக்க உறுப்பினர் சிலரின் உயிரினை திட்டமிட்டு பறித்து வந்த இப்போக்கு, இப்போது இயக்கங்களின் உயிரினைக் கேட்டு நிற்கிறது. விடுதலை இயக்கங்கள் சிலவற்றை நிர்மூலம் செய்து, தான் நம்புகின்ற கருத்துக்களுக்காகப் போராடும் சமுதாயத்தின் தனிமனித ஜனநாயக உரிமைகளை துப்பாக்கிக் குண்டுகளால் பறித்து விடக் கனவு காண்கிறது.

1983 ஜூலைப் படுகொலைகளைத் தொடர்ந்து பெருமளவில் ஆயுதம் ஏந்திய எமது இளைஞர்கள், பண்டைப் பெருமைகளைப் பேசிப் பேசி, உயிர் வாழ்ந்த (!) எமது சமுதாயத்தில், புதிய வரலாறு ஒன்றை எழுத ஆரம்பித்தார்கள். 1983ல் எமது இனம் அனுபவித்த சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கும், அதன் உச்சக் கட்டமாக வெலிக்கடைச் சிறையினுள் மனித இனமே வெட்கித் தலைகுனியும் வகையில் இரண்டு தடவைகள் நிகழ்த்தப் பட்ட படுகொலைகளுக்கும் பழிதீர்க்கும் நடவடிக்கையாக, நாம் வாழ்ந்து வரும் பிரதேசங்களை எமது மக்களின் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கான போராட்டத்தில் ஆயிரமாயிரமாய் அவ் இளைஞர்கள் குதித்தனர். கணவனைப் போர்க்களத்துக்கு அனுப்பி அவன் இறக்க, தன்னுடைய ஒரே ஒரு மகனை அனுப்பி அவனும் இறக்க, தானே போர்முனைக்கு சென்ற பெண்ணின் புறநானூற்றுக் கதையை தோற்கடித்து, குடும்ப வேலிக்குள் தமது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான இளம்பெண்கள் ஆயுதமேந்திப் போரிடஎழுந்தனர். இத்தனைக்கும் மேலாக கணவனும் குழந்தைகளும் மட்டுமே தமது உலகமென்றிருந்த தாய்மார்கள் மூலை முடுக்கெல்லாம் தெருவினில் இறங்கி போர்க்குரல் எழுப்பினர். இதன் பிரதிபலிப்பாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தேடும் பணிகளில் மும்முரமாயினர்.

## ஆனால் இன்று நடந்து கொண்டிருப்பது என்ன?

EPRLF மீது விடுதலைப் புலிகள் எடுத்துவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் முற்போக்கு சக்திகள் மத்தியில் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் கிளறிவிட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள EPRLF இன் அனைத்து உறுப்பினர்களும் வேட்டையாடப்படுகின்றனர். விடுதலைப் போராளிகளைத் தேடி காக்கிகளின் நிழல் யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்கெல்லாம் தவழ்ந்த காலம் போய், அதே விடுதலைப் போராளிகளைத் தேடி புலிகளின் நிழல் தவழ ஆரம்பித்துவிட்டது. எந்தத் தமிழ்ப் பெண்களின் கற்பைக் காப்பாற்ற